# யாரும் சந்திக்காத சவால்களைச் சந்தித்தவர் கலைஞர்!

## ‘நியூஸ் 18’ தொலைக்காட்சியின் ‘சொல்லதிகாரம்’ விவாத நிகழ்ச்சியில் ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ. ஆணித்தரமான வாதம்!

**‘நியூஸ் 18’ தமிழ் தொலைக்காட்சியில் ச.கார்த்திகைச்செல்வனை நெறியாளராகக் கொண்டு “தி.மு.க. 75 ஆண்டுகள்... சாதித்தது என்ன? சவால்கள் என்ன?” என்ற தலைப்பில் நடைபெற்ற ‘சொல்லதிகாரம்’ விவாத நிகழ்ச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நாகை சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ் அடுக்கடுக்காக எடுத்துவைத்த கருத்துகள் வருமாறு:**

தி.மு.க. மிகப்பெரிய நெருக்கடிக்குள்ளான ஒரு கட்சி. அதிலும் 50 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கட்சியை வழி நடத்திய கலைஞர் மற்ற எந்தத் தலைவரைக் காட்டிலும் மிக மோசமாக குறி வைக்கப்பட்டவர், இழிச்சொல்லுக்கு ஆளாக்கப்பட்டவர். அவருடைய தலைமையில் அந்தக் கட்சி அதிகாரத்தை அடைவது என்பது மிகவும் சவாலானது. அது எம்.ஜி.ஆருக்கு இல்லாத சவால், ஜெயலலிதா அம்மையாருக்கு இல்லாத சவால், மற்ற யாருக்கும் இல்லாத சவால், கலைஞர் அவர்களுக்கு மட்டும் இருந்தது.



சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ்

நெறியாளர் கார்த்திகைச் செல்வன்

**நெறியாளர் கார்த்திகைச் செல்வன்:** எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?

**ஆளூர் ஷாநவாஸ்: கலைஞர் அவர்கள் பின்பற்றிய கொள்கை. அதில் அவர் காட்டிய உறுதி. அவருக்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது. அவருக்கு ‘லாபி’ செய்வதற்கு ஆள் கிடையாது. அவர் வந்து இயங்காமல் ஒரு நான்கரை வருடங்கள் வீட்டில் சும்மா உட்கார்ந்து விட்டு, கடைசியில் ஒரு ஆறு மாதம் மட்டும் ஃபீல்டுக்கு வந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? என்று நினைத்துப் பாருங்கள். ஆனால் அதனை மிகச் சாதாரணமாக ஜெயலலிதா அம்மையாரால் செய்ய முடியும்.**

**ஆறு மாதம் வந்து வேலை செய்தால் போதும் ஆட்சியே கிடைத்துவிடும். கலைஞர் அவர்கள் அப்படி ஆறு மாதம் மட்டும் வேலை செய்து என்றைக்காவது ஆட்சியைப் பிடித்திருக்கிறாரா? அது சாத்தியமே கிடையாது. அது எப்படி? இவர்களுக்காக யார் வேலை பார்த்தார்கள்? அவர்களுக்காக யார் ‘லாபி’ செய்தார்கள்? அவர்கள் குற்றமே செய்தாலும், அதனை எளிதில் கடந்து போய் விடுவார்கள். கலைஞர் குற்றமே செய்யவில்லை என்றாலும் விமர்சிக்கப்படுவார்.**

கருத்துருவாக்கம் என்பது மிகவும் முக்கியமானது. நல்ல எண்ணங்களை உருவாக்கம் செய்வது என்பது மிகவும் முக்கியமானது. ஆதரவாகவோ, எதிர்ப்பாகவோ ஒன்றைக் கட்டமைப்பது இருக்கிறது அல்லவா, அதற்கான வலிமை – அது மிகவும் முக்கியமானது. 25 ஆண்டுகள், தொடர்ந்து மோடியால் குஜராத்தை ஆள முடிகின்றது என்றால், அங்கே மோடிக்கு எதிரான எதிர்ப்பு இயக்கம், அதற்கான கருத்துருவாக்கம் என்பது பலவீனமாக இருக்கின்றது என்றுதான் அர்த்தம். அது தான் விஷயம். மோடிக்கு எதிரான இயக்கம், மிகவும் வலுவாக இருக்கிறது, அதைக் கட்டமைக்கக் கூடிய சக்திகள் மிகப்பெரிய அளவில் இருக்கிறார்கள் என்றால் அங்கேயும் அது சாத்தியமில்லை. இங்கே திராவிட இயக்கத்திற்கு எதிரான வெறுப்பு – அப்படி இருந்தும் திராவிட இயக்கம் ஆழமாக வேரூன்றி இருக்கிறது. அந்த அளவிற்கு அதற்கு எதிரான வெறுப்பு அரசியலும் இருக்கின்றது. அதனை முன்னெடுப்பவர்களுக்கு எதிரான தனிப்பட்ட தாக்குதல்களும் இருக்கின்றது.

அவர்களை உளவியலால் வீழ்த்தக்கூடிய அளவிற்கு சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். இதனையெல்லாம் தாண்டிதான் அவர்கள் அதிகாரத்திற்கு வர வேண்டும்.

இப்போது பார்த்தீர்கள் என்றால் இட்டுக் கட்டப்பட்ட ஒரு பொய்யின் மூலம் ஜெயலலிதா அம்மையாரை ஆட்சியில் இருந்து அகற்ற முடியுமா? இட்டுக் கட்டப் பட்ட ஒரு பொய்யின் மூலம் எம்.ஜி.ஆரை ஆட்சியில் இருந்து அகற்ற முடியுமா? இட்டுக்கட்டப்பட்ட ஒரு பொய்யின் மூலம் அ.தி.மு.க.வை ஆட்சியில் இருந்து அகற்ற முடியுமா? முடியாது! ஆனால் தி.மு.க.வை அகற்ற முடியும்!

2011 இல் 2ஜி ஸ்பெக்ட்ரம் மூலம் அதனை சாதித்துக் காட்டினார்கள். இன்றைக்கு வரைக்கும் அதனை நிரூபிக்க முடியவில்லை. ஆனால், ஜெயலலிதா அம்மையார் மீது தி.மு.க. வைத்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. தண்டிக்கப்பட்டு இருக்கிறார். அதனை நாம் பார்க்க வேண்டும். இரண்டும் ஒன்று கிடையாது. ஆனால் அது அ.தி.மு.க. வுக்கு நடக்காது, தி.மு.க.விற்கு நடக்கும். எப்படி நடக்கிறது? அதனை யார் நடத்துகிறார்கள்? அதனைச் செய்தது யார்? அப்படியென்றால், ஒரு வலிமையான இயக்கம் தி.மு.க.விற்கு எதிராக எப்போதுமே வேலை செய்து கொண்டு இருக்கின்றது.

ஊழலுக்காக முதன் முதலில் பதவி இழந்தவர்கள் யார்? டி.டி.கிருஷ்ணமாச்சாரி – யாராவது இன்றைக்கு அதைப்பற்றிப் பேசுகிறார்களா? ஊழலுக்காகத் தண்டிக்கப்பட்டவர் யார்? ஜெயலலிதா அம்மையார் – யாராவது அதனைப்பற்றிப் பேசுகிறார்களா? முதன் முதலில் வாரிசு அரசியலை புகுத்தியது யார்? ராஜாஜி – யாராவது அதைப் பற்றி பேசு கிறார்களா? உங்களுக்கு வாரிசு அரசியலை நினைவு கூர வேண்டும் என்றால் நீங்கள் ராஜாஜியைத் தானே ‘ட்ரெண்ட்’ படுத்த வேண்டும்.

> **“2011 இல் 2ஜி ஸ்பெக்ட்ரம் குறித்து இட்டுக்கட்டப்பட்ட பொய்யின் மூலம் (தி.மு.க.வை தோற்கடித்து) அதனை சாதித்துக் காட்டினார்கள். இன்றைக்கு வரைக்கும் அதனை நிரூபிக்க முடியவில்லை. ஆனால், ஜெயலலிதா அம்மையார் மீது தி.மு.க. வைத்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. தண்டிக்கப்பட்டு இருக்கிறார். அதனை நாம் பார்க்க வேண்டும். இரண்டும் ஒன்று கிடையாது. ஆனால் அது அ.தி.மு.க.வுக்கு நடக்காது, தி.மு.க.விற்கு நடக்கும். எப்படி நடக்கிறது? அதனை யார் நடத்துகிறார்கள்? அதனைச் செய்தது யார்? அப்படியென்றால், ஒரு வலிமையான இயக்கம் தி.மு.க.விற்கு எதிராக எப்போதுமே வேலை செய்து கொண்டு இருக்கின்றது.”**

ராஜாஜி பிறந்த நாளில் அதனை ‘ட்ரெண்ட்’ செய்ய வேண்டும். ஆனால் கலைஞர் பிறந்த நாளில் அதனை ‘ட்ரெண்ட்’ செய்கிறார்கள். ‘ட்ரோல்’ செய்கிறார்கள், சம்பந்தமே இல்லாமல். கலைஞர் அவர்கள் அதனைக் கொண்டு வரவில்லை. ஆனால் அவரை ‘ட்ரோல்’க்குள் கொண்டு வருகிறார்கள். அவர் தண்டிக்கப்படவில்லை, ஆனால் அவர் ‘ட்ரோல்’ – க்குள்ளாக்கப்படுகிறார்.

இது எப்படி ? இறந்து போன பிறகும் ஒரு மனிதர் அவர் சம்பந்தப்படாத ஒரு விஷயத்திற்காகக் குறி வைக்கப்படுகிறார் பாருங்கள். இதுதான் விஷயம். சம்பந்தப் பட்டவர்கள் மறக்கடிக்கப்பட்டுவிட்டார்கள்.

**இன்றைக்கு மாநில உரிமையை விட்டு விட்டார். கச்சத்தீவை தூக்கிக் கொடுத்து விட்டார். அவர் ஏற்றுக் கொள்ளாத, எதிர்ப்புத் தெரிவித்த, விஷயத்தையெல்லாம் கலைஞர் அவர்கள் மீது குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால், “தேவி குளம், பீர்மேடு போனால் என்ன, அவை எல்லாம் இந்தியாவில்தானே இருக்கின்றது” என்று சொன்னவர் காமராஜர். அதற்காக காமராஜர் விமர்சிக்கப் படுகிறாரா என்றால், கிடையாது!**

காமராஜர் ஆட்சிக்காலத்தில் ‘தமிழ் நாடு என பெயர் சூட்டக்கோரி சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்து இறந்து போகிறார். தி.மு.க. ஆட்சிக்கு வந்து, அண்ணா முதலமைச்சராக வந்ததும் அந்தப் பெயரை நிலைநாட்டுகிறார். ஆனால், பிரச்சினையாக – இன்றைக்கு தமிழுக்கு விரோதி, தமிழ் இனத்துக்கு விரோதி என்று யாரை குற்றம் சாட்டுகிறார்கள்? சங்கரலிங்கனாரை இறக்க விட்டவர்களையா, பெயர் வைத்த வர்களையா?

> **“வாரிசு அரசியல் என்று தி.மு.க.வை நோக்கி மட்டும்தான் குற்றச்சாட்டு வைக்கிறார்கள். எப்படி மு.க.ஸ்டாலின் வந்தார்? எப்படி உதயநிதி வந்தார்? என்று மட்டும்தான் கேட்கிறார்கள். அதே போல், எப்படி பிரேமலதா வந்தார்? எப்படி அவருடைய மகன் விஜய பிரபாகரன் வந்தார் என்று அவர் கேட்கவில்லை. எப்படி அன்புமணி வந்தார்? இப்போது தேர்தல் வரைக்கும் அவருடைய பிள்ளைகள், மனைவி எல்லோரும் போய் நின்றார்களே, அது எப்படி என்று கேட்கவில்லை.”**

அப்போது இல்லாத, பொல்லாத பழியைச் சுமக்க வேண்டி இருக்கிறது பாருங்கள், இது வினோதமாக இருக்கின்றது. ம.பொ.சி. “இலங்கையில் இருந்து வந்த இந்திய அமைதிப்படையை வரவேற்பேன்” என்று போகிறார். “இலங்கையில் போய் தமிழ் மக்களைக் கொன்று ஒழித்துவிட்டு வரக்கூடிய படையை நான் வரவேற்கப் போவேன்” என்று சொல்லிப் போனார். கலைஞர் முதலமைச்சராக இருந்தார். ‘Protocol’ (நடைமுறை) படி அவர் போய் வரவேற்க வேண்டும். ம.பொ.சிக்கு ‘Protocol’ – லே கிடையாது. ஆனால், தமிழினத் தலைவராக ம.பொ.சி. போற்றப்படுகிறார். ஆனால், **“இலங்கைத் தமிழ் மக்களைக் கொன்று விட்டு வரக்கூடிய ராணுவப் படையை வரவேற்கச் செல்லமாட்டேன்” என்று சொன்ன கலைஞர் அவர்கள் தமிழின விரோதியாக சிலரால் தூற்றப்படுகிறார்.**



எப்படி? வரலாற்றில் எவ்வளவு பெரிய வினோதங்கள் நடக்கின்றன பாருங்கள். இது எப்படி கட்டமைக்கப்படுகிறது? இந்தக் கட்டமைப்புக்குப் பின்னால் இருக்கும் அரசியல் என்ன? இதுதான் நமது கேள்வி.

உண்மையிலேயே தி.மு.க. குற்றம் செய்திருந்தால் அந்தக் குற்றத்தை கேள்வி கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கின்றது. எல்லோருமே கேள்வி கேட்க வேண்டும். யாராக இருந்தாலும் கேட்க வேண்டும். எப்படி இப்படிச் செய்தீர்கள் என்று கேட்கலாம், முரண்படலாம். விமர்சிக்கலாம். ஆனால் வரலாற்றில் இன்னொருவர் அந்தக் குற்றத்தை செய்து இருக்கிறார், அதனை மறைத்துக் கொண்டு , கழித்துக் கொண்டு நமது தலைவர்களைப் போற்றுகிறோம். அந்தக் குற்றத்திற்குத் தொடர்பு இல்லாதவரைத் தூற்றுகிறோம். இதுதான் தி.மு.க. எதிர்கொள்ளக் கூடிய மிகப் பெரிய சவால்.

**நெறியாளர்:** தி.மு.க.வுக்கு இருந்து கொண்டிருக்கக் கூடிய சிக்கல்கள் என்று சில விஷயங்களை நீங்கள் பட்டியல் இடுகிறீர்கள். அதனையெல்லாம் கடந்து அவர்கள் நின்று இருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். சூர்யா என்ன சொல்கிறார் என்றால், அவர்களின் தலைவர்கள், அவர்கள் ஏற்றுக் கொண்ட கொள்கையில் அவர்கள் அப்படியே நீடிக்கிறார்களா? என்ற கேள்வியை முன் வைக்கிறாரே?

**ஆளூர் ஷாநவாஸ்:** அரசியல் சூழ்நிலையுடன்தான் அதனை பொருத்திப் பார்க்க வேண்டும். எந்த ஒரு விஷயமும், எதுவுமே தொடங்கிய புள்ளியில் அப்படியே நிற்காது. இன்றைக்கு எல்லாக் கட்சிகளிலும் என்ன நிலைமை? அதனைப் பாருங்கள். எல்லா கட்சியோடும் தி.மு.க.வை பொருத்திப் பாருங்கள். சம கால அரசியலோடு பொருத்திப் பார்க்க வேண்டும். அடித்தளத்தில் இருந்துதான் தலைவர்கள் வரவேண்டும். மக்களிடத்தில் இருந்து தலைவர்கள் வரவேண்டும். மக்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு வர வேண்டும். எல்லோருக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். சரியான கருத்து.

ஆனால் இந்தக் கேள்வியை தி.மு.க.வை நோக்கி மட்டும்தான் வைக்கிறார்கள். எப்படி மு.க.ஸ்டாலின் வந்தார்? எப்படி உதயநிதி வந்தார்? என்று மட்டும்தான் கேட்கிறார்கள். அதே போல், எப்படி பிரேமலதா வந்தார்? எப்படி அவருடைய மகன் விஜய பிரபாகரன் வந்தார் என்று அவர் கேட்கவில்லை. எப்படி அன்புமணி வந்தார்? இப்போது தேர்தல் வரைக்கும் அவருடைய பிள்ளைகள், மனைவி எல்லோரும் போய் நின்றார்களே, அது எப்படி என்று கேட்கவில்லை.

**ஒரு குடும்பத்தின் கட்டுப்பாட்டுக்குள் கட்சியே போகிறதே ஏன் என்று அவர் கேட்கவில்லை. அவர் அதனைக் கேட்டு இருந்தால் நியாயம். அவர் அதனை இங்கே கூட கேட்கலாம். கேளுங்கள். ஆனால், அவர் இங்கே கேட்கமாட்டேன் என்கிறார். அப்படி ஒரு கட்சியை மட்டும் குறி வைக்கிறீர்கள். அது ஏன்? அப்போது வாரிசு என்பதிலும் கூட, குடும்பம் என்பதில் கூட தி.மு.க. மட்டும்தான் பழியைச் சுமக்கிறது.**

புதியதாக வந்த சீமான் கூட, “உதயநிதி எப்படி வரலாம், வேறு ஆளே இல்லையா?” என்று கேட்கிறார். ஆனால் அவரே அன்றைக்கு என்ன சொன்னார்? விருதுநகரில் அந்தத் தம்பி வெற்றிபெற்று இருக்கலாம் என்று சொல்கிறார். அது எப்படி? ஏன் அந்தக் கட்சியில் வேறு ஆளே இல்லையா ?

வாங்குகின்ற நான்கு சீட்டில் அந்தக் கட்சிக்காரர்களுக்கே நான்கு சீட்டையும் கொடுக்கலாமே. விருதுநகரில் கொண்டு வந்து அவரை நிறுத்துகிறார்கள். அன்புமணி மனைவியைக் கொண்டு வந்து தருமபுரியில் நிறுத்துகிறார்கள். மொத்த கட்சியையும், மொத்த கவனத்தையும் அங்கே கொண்டு போய் குவிக்கிறார்கள். சேப்பாக்கம் தொகுதியில் மட்டும்தான் தி.மு.க.வினர் வேலை பார்த்தார்களா ?

தி.மு.க. விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட கட்சி அல்ல. தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்து நாங்களே பல விஷயங்களை விமர்சிக்கிறோம். அது வேறு. ஆனால், தி.மு.க.வை நோக்கி கேள்வி கேட்பதற்கும் ஒரு நியாயம் இருக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

இவ்வாறு ஆளூர் ஷாநவாஸ் குறிப்பிட்டார்.